**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 22-08-2024

SC.32/2023

அ.சா. - 2 சசிதர்

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் சசிதர் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சு. ஸ்ரீவித்யா, பி.காம். எம்.ஏ.பி.எல்., சார்பு நதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சசிதர் | தந்தை பெயர் | பாலாஜி |
| வயது | 28 | கிராமம் | கிருஷ்ணம்மாகொத்தூர் |
| தாலுக்கா | ஓசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை**

நான் ் கிருஷ்ணம்மாகொத்தூர் கிராமத்தில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 11-07-2021ம் தேதிகாலை 8.30 மணியளவில் நானும் என் சித்தப்பா மல்லையாவும் கிருஷ்ணம்மாகொத்துாரில் எனக்கு சொந்தமான விவசாய நிலம் இருந்தோம். அப்பொழுது தோட்டத்தில் நாங்கள் தண்ணீர் கட்டிக்கொண்டு இருந்தோம். அப்பொழுது என்னுடைய பெரியப்பா எருவு டிராக்கடரில் வந்துக்கொண்டிருந்தார். அப்பொழுது என் பெரியப்பா அய்யோ அம்மா என்று கத்தினார். என்ன என் பெரியப்பா இப்படி கத்துகிறார் என்று என்ன ஏது என்று பார்க்க நானும் என் சித்தப்பாவும் அந்த இடித்திற்கு ஓடினோம். அப்பொழுது ஆஜர் எதிரிகள் மூவரும் சேர்ந்து என் பெரியப்பாவை கையில் அன்னையப்பா வெட்டிக்கொண்டும் சுரேஷ்பாபு கடப்பாறையால் குத்துக்கொண்டும் இருந்தார்கள். ஒரு முறை குத்தியதற்கு பிறகு 2வது முறையும் சுரேஷ்பாபு குத்தபோகும்போது என் சித்தப்பா கடப்பாறையை பிடித்துக்கொண்டார். நான் என் பெரியப்பாவை துாக்குவதற்காக குனிந்தபோது ஆஜர் எதிரியான வெங்கட்டலட்சுமி கட்டையால் என் தலையின் மீது அடித்தார். அடித்தப்போது நான் கையால் தலையை பிடித்தப்போது அன்னையப்பா என்னுடைய இடது முழங்கையின் மீது அறிவாளால் வெட்டும்போது கண்டார ஓலி தேவடியா பசங்களா இன்றோடு ஒழிந்துபோங்கடா இந்த நாட்டிலேயே இருக்கக் கூடாது என்று கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டே என்னுடைய இடது கையில் வெட்டினார்கள். அதில் எனது இடது கை எழும்பு முறிந்துவிட்டது. உங்களுடைய வம்சத்தை நாங்கள் சாகடிக்காமல் விடமாட்டோம் என்று சொல்லி கீழே விழுந்த என் முகத்தின் மேல் அன்னையப்பா செருப்பு காலால் உதைத்து முகத்தின் மீது கால் வைத்து அழுத்தி பிடுத்துக்கொண்டார். நாங்கள் எல்லோரும் கத்திவுடன் அக்கம் பக்கத்தில் இருந்த எல்லோரும் அங்கு ஓடிவந்தார்கள். அவர்கள் வருவதை பார்த்தவுடன் ஆஜர் எதிரிகள் மூவரும் இன்றைக்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்றைக்கு இருந்தாலும் நாங்கள் உங்களை சாகடிக்காமல் ஓடிவிட்டார்கள். எனக்கு தலையில் அடிப்பட்டதால் எனக்கு அதன் பிறகு ஞாபகமில்லை. எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சூளகிரியல் உள்ள விஜய் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதை நான் தெரிந்துக்கொண்டேன். நான்

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபொழுது உத்தனப்பள்ளி காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டார்கள். விஜய் மருத்துவமனையிலிருந்து என்னுடைய கையில் ஏற்பட்ட எழும்பு முறிவிற்காக ஓசூரில் உள்ள லட்சுமி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கும் மற்றும் என் வீட்டில் வைத்தும் என்னை போலீசார் விசாரித்தார்கள். இந்த பிரச்சனைக்கு முன்பு 4 வருடத்திற்கு முன்பு என் பெரியப்பா அன்னையப்பா மச்சானிடமிருந்து 2 அல்லது 2 1/2 ஏக்கர் பூமியை கிரயமாக வாங்கியிருந்தார். அந்த தேதியிலிருந்து இன்று வரை எங்களுடைய பூமியை நீ எப்படி வாங்கலாம் என்றும், உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள அறிவாள், கட்டை, கடப்பாறை ஆகியவைகளால் தான் ஆஜர் எதிரிகள் சம்பவ தேதியில் எங்களை தாக்கினார்கள். போலீசார் இது தொடர்பாக விசாரித்தார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

R SRIVIDYA

Digitally signed by R SRIVIDYA
Date: 2024.08.22 13:40:15 +0530